www.apsira.com
Education in India

# அரையாண்டு தேர்வு 2010 - 2011

நிலை : VI

## தமிழ்

நேரம் : 2 மணி

மதிப்பெண் : 100

குறிப்பு : 1. விடைகள் குறிப்பிட்ட அளவினதாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்
2. கையெழுத்து தெளிவாய் இருத்தல் வேண்டும்

**I. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு ஓரிரு சொற்களில் விடை எழுதுக.** 3x2=6

1. இராமலிங்க அடிகளாரின் சிறப்பு பெயர் யாது?
2. எதற்கு தாழ்ப்பாள் இல்லை?
3. எவற்றை செய்யாதே என்கிறார் சித்தர்?
4. சங்கக்காலத்தில் இருந்த தொகை நூல்கள் இரண்டினைக் கூறு?
5. பூமிப்பந்தின் விலை என்ன?

**II. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு நான்கு வரிகளில் விடை எழுதுக.** 3x4=12

6. நாலடியார் சொல்லும் நட்பினைப் பற்றி நான்கு வரிகளுக்கு மிகாமல் கூறுக?
7. கற்றவர்க்குக் கட்டுச்சோறு தேவைப்படாது ஏன்?
8. கிளைகளை வெட்டும் தோட்டக்காரனிடம் மரம் சொல்வது என்ன?
9. கடுவெளிச்சித்தர் கூறும் அறிவுரைகளுள் சிறப்பான மூன்றினைக் கூறு?
10. தன்னைத் தாழ்த்தி கூறும் நண்பனுக்கு தாராபாரதி கூறும் பதில் யாது?

**III. பின்வரும் பாடல்களை அடிபிறழாமல் எழுதுக.**

11. "நாடாகு ஒன்றோ" எனத் தொடங்கும் புறநானூறு பாடல் 4
12. "அன்பிற்கும்" "அன்பகத்து" எனத் தொடங்கும் குறட்பாக்கள் 4

**IV. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கனுக்கு விடை எழுதுக.** 4x2=8

13. உ.வே.சா அவர்களின் இயற்பெயர் யாது?
14. நீர் நிலையில் வாழும் மூன்று பறவைகளை கூறு?
15. நாட்டுப்புறப் பாடல்களை முன்பு எவ்வாறு வழங்கினர்?
16. எதைப் படிக்க வேண்டிய நூல் என்கிறார் நேரு?
17. பெரியார் தோற்றுவித்த இயக்கம் யாது?
18. முத்துராமலிங்கத் தேவரின் பெற்றோர் யாவர்?

**V. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கனுக்கு நான்கு வரிகளில் விடை எழுது.** 4x4=16

19. உ.வே.சா அவர்களை தமிழ் தாத்தா என்று வழங்க காரணம் என்ன?
20. மனிதர்களில் நல்ல நண்பன் எது? ஏன்?
21. ஏழுவகை நாட்டுப்புறப் பாடல்கள் யாவை?
22. நூல்களை நாம் ஏன் படிக்க வேண்டும்?
23. பெரியார் ஏன் வைக்கம் வீரர் என வழங்கப்பட்டார்?
24. தமிழக அரசு முத்துராமலிங்கத் தேவரைப் போற்றும் வகையில் என்ன செய்துள்ளது?

**VI. பின்வரும் சொற்களுள் நான்கனுக்கு பொருள் தருக.** 2

25. பண், சேப், ஓதின், புனல், வீறாப்பு, அவல், தேசம்

அல்லது

எவையேனும் நான்கனுக்கு எதிர்ச்சொல் தருக.

நண்பன், நாடு, தாழ்வு, புகழ், அணி, அறம்

26. **பிரித்து எழுது.** 2

எவ்வழி, உண்னுலகம், நாற்றிசை, நன்கணியர்

27. **சேர்த்து எழுது.** 2

கண் + நீர், உலகம் + அறியாது, நான் + ஒரு, சார்பு + என்ப

For More Question Paper
Log on to http://samacheerkalvi.apsira.com/

www.apsira.com
Education in India

28. கீழ்வரும் சொற்களுள் இரண்டனை மையமாகக் கொண்டு வினாக்கள் அமைக்க. 2

சர்க்கரை, சூரியன், வீரம், சிறை

29. எவையேனும் இரண்டனைச் சொந்த வாக்கியத்தில் எழுது. 2

கூடை, வாய்க்கால், தன்னம்பிக்கை, புத்தகம்

VII. புறவய வினாக்கள் (சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுதல்) 10x1=10

30. யாரை நாம் தமிழ் தாத்தா என்று அன்போடு வழங்குகிறோம்

அ. ஈ.வெ.ரா ஆ. முத்துராமலிங்கத் தேவர் இ. உ.வே.சா

31. ஜப்பான் நாட்டின் மீது குண்டு வீசிய நாடு

அ. அமெரிக்கா ஆ. ஜப்பான் இ. ரஷ்யா

32. பட்டாசு வெடிக்காத ஊர்

அ. வேடந்தாங்கல் ஆ. கூத்தன்குளம் இ. பழவேற்காடு

33. கூடு கட்டி வாழும் பாம்பு

அ. நல்லபாம்பு ஆ. கருநாகம் இ. இராஜநாகம்

34. நாட்டுப்புற பாடல்களின் வகைகள்

அ. ஒன்பது ஆ. எட்டு இ. ஏழு

35. நேரு விரும்பி படித்த நூல்கள் எந்த மொழியில் இருந்தன?

அ. இந்தி ஆ. ஆங்கிலம் இ. தமிழ்

36. ஈ.வெ.ரா வாழ்ந்த ஆண்டு

அ. ஐம்பத்தெட்டு ஆண்டுகள் ஆ. அறுபது ஆண்டுகள் இ. தொண்ணூற்று ஐந்து ஆண்டுகள்

37. தங்க மாம்பழம் கொடுத்த அரசர்

அ. சுயசிந்தனை உடையவர் ஆ. எதையும் ஆராய்ந்து பார்ப்பவர் இ. பிறர் சொல் கேட்பவர்

38. முத்து ராமலிங்கத் தேவர் பிறந்த ஊர்

அ. திருநெல்வேலி ஆ. பசும்பொன் இ. கயத்தாறு

39. பழுதடைந்த குடிசையில் வாழ்ந்தவர்

அ. ஏழை மனிதன் ஆ. பார்வையற்ற ஒருவரும் கால் இழந்த ஒருவரும் இ. கையிழந்த ஒருவர்

VIII. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக. 5x2=10

40. மெய்யெழுத்துக்களை எழுது?

41. பெயர்ச்சொல் என்பது யாது? எடுத்துக்காட்டு தருக?

42. இரட்டைக் கிளவி விளக்குக?

43. குறில் நெடில் பிழைகளைத் திருத்தி எழுது?

அ. சாப்பாடு தாயாா் ஆ. பள்ளிக்குடம் அருகில் உள்ளது

44. சுட்டெழுத்து என்றால் என்ன?

45. வினா எழுத்து என்றால் என்ன? அவை யாவை?

46. மெய் மயக்கம் எத்தனை வகைப்படும்?

IX. பின்வரும் துணைப்பாட வினா ஒவ்வொன்றுக்கும் ஐந்து வரிகளில் விடை எழுது. 3+3+4=10

47. மருத்துவர் கூறியதாய் தெனாலிராமன் கூறியது யாது?

48. ஊர்காவலரின் தோட்டத்துக்கு பார்வையற்றவரும், காலிழந்தவரும் எவ்வாறு சென்றனர்?

49. உங்கள் ஊர் திருவிழாவில் வேறு என்னென்ன ஆட்டங்கள் நடைபெறும்? பட்டியலிடுக?

X. கீழ்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனைப் பற்றி பதினைந்து வாக்கியங்களில் எழுது? 1x10=10

50. பள்ளி படிப்பை இடையில் நிறுத்தி விட்டு வேலைக்கு செல்லும் உன் நண்பனுக்கு மீண்டும் பள்ளிக்கு வருமாறு ஒரு கடிதம் வரைக?

51. காடுகளின் பயன்கள்

52. குழந்தைகள் தினம்

For More Question Paper
Log on to http://samacheerkalvi.apsira.com/